மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறிப்பிட்ட கால வரம்புக்கு உட்பட்டு எடுக்கப்பட்டு, காலம் முடிந்தபின் திருப்ப அனுப்பப்பட்டார்கள்.

திரு. கே. விநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் வேலைசெய்யும் அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் சிப்பந்திகளை அவர்கள் வாபஸ் பெற்றுவிட்டார்களா? நாம் டீ—கண்ட்ரோல் செய்ததினாலே சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலிருந்து பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து வந்தவர்கள் அனைவருமே திரும்ப அனுப்பப்படவில்லை. 23 பேர்கள்தான் திரும்ப அனுப்பப்பட்டார்கள். இன்னும் நாலைந்து பேர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறார்கள். டீ-கண்ட்ரோல் செய்ததன் விளைவாக பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தனிக் கேள்விகேட்டால் பதில் சொல்லப்படும்.

தமிழ்நாடு மத்திய சிறைச்சாலைகள்

258 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டிலுள்ள மத்திய சிறைச்சாலைகளை புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும், அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்குப் பின்னால், நமது அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் மத்திய சிறைச்சாலைகளில், சிறைச்சாலைச் சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனிக் கேள்வி போடவும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே இருக்கிற மத்திய சிறைச்சாலைகள் எல்லாம் வெள்ளையர் ஏகாதிபத்திய காலத்தில் கட்டப்பட்ட மிகப் பழைமையான கட்டிடங்களாகும். ஆகவே, இந்தக் கட்டிடங்களைப் புதுப்பிக்க அரசு முடிவு செய்யுமா? பாளையங்கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டு வருவதுபோல, மற்ற இடங்களிலும் மாறுதல் செய்து, சில புதிய திட்டங்களை அமல் நடத்துமா?

1970 மார்ச் 7]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் புதிதாக மத்திய சிறைச்சாலையை அமைப்பதால் சில மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக, சிறைச்சாலைகளின் எண்ணிக்கை விரிவடையக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கை யாகும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையில் அப்போது ரொம்ப இட நெருக்கடியாக இருந்தது. இப்போது இருக்கக்கூடிய அமைச்சர்களும் அதிகமாக அங்கே போயிருக்கக்கூடும். இட வசதி குறைவு, மிகவும் பழமையான கட்டிடம். ஆகவே, இப்படிப்பட்ட பழமை யான கட்டிடங்களை மாற்றி, புதிதாக, கைதிகளுக்கு ஓரளவு வசதி களை செய்து கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மத்திய சிறையில் இட நெருக்கடி இருப்பதாக கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இனிமேல், அப்படிப்பட்ட கஷ்டம் அவருக்கு அங்கு இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே. அமைச் சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சிறைச்சாலைகளை அதிகப் படுத்துவது இந்த அரசின் கொள்கை அல்ல என்று கூறினர். தண்டனையாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தும்போது, அதற்குத் தக்கபடி சிறைச்சாலைகளின் எண்ணிக்கையும் அதிகப் படவேண்டும் அல்லவா ? தண்டனையாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே, அதற்குத்தக்கப் படி அரசு இடவசதி செய்து தருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் இத்தனை பேர் என்று கணக்கு இருக்கிறது. பொதுவாக சிறைச்சாலைகளின் தேவை குறைந்து, குற்றவாளி களின் எண்ணிக்கை குறைந்தால்தான் நல்லாட்சி நடக்கிறது என்று அர்த்தம். அப்படிப்பட்ட நல்லாட்சியை அமைக்க நாங்கள் விரும்புகிறோம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் திறந்தவெளி சிறைச் சாலைகளை அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, என் னுடைய நினைவுக்குத் தெரிந்தமட்டில், இரண்டு இடங்களில் இருக் கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கக்கூடிய மத்திய சிறைச்சாலை பெரிய மருத்துவமனைக்குப் பக்கத்தில் இருப்பதால், மருத்துவமனையை மேலும் விஸ்தரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே,